සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

**இலங்கை கணக்காளர் சேவை உத்தியோகத்தர்களுக்கான**
**முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2020(I)**

| காலம் 03 மணித்தியாலங்கள் | சட்டம் மற்றும் முகாமைத்துவம் - 07 | විභාග අංකය Index No / சுட்டெண் .................................. |
|---|---|---|

- **ஒரு பகுதியிலிருந்து ஆகக் குறைந்தது 02 வினாக்களைத் தெரிவுசெய்து ஐந்து (05) வினாக்களுக்கு விடையளிக்க.**
- **ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.**

## பகுதி I

01. I. இலங்கை நீதிமன்றக் கட்டமைப்புக்குள் காணப்படும் நீதிமன்ற வகைகளைக் குறிப்பிடுக. (Court Hierarchy) (10 புள்ளிகள்)

II. தாங்கள் மேலே குறிப்பிட்ட நீதிமன்றங்களில் இரண்டைப் (02) பற்றி சிறு குறிப்பு எழுதுக. (10 புள்ளிகள்)

02. I. பொருள் விற்பனை தொடர்பில் இலங்கையில் அமுலிலுள்ள சட்டம் யாது? (05 புள்ளிகள்)

II. பொருள் விற்பனை ஒப்பந்தம் என்பது யாது? (05 புள்ளிகள்)

iii. பொருள் விற்பனை ஒப்பந்தமொன்றில் பங்கேற்கும் பிரதான திறத்தவர்களைக் குறிப்பிட்டு அவர்கள் தொடர்பில் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

iv. A எனும் கம்பனி ரூ.100,000/= விலைக்கு இயந்திரமொன்றை உற்பத்தி செய்து B க்கு வழங்குவதற்காக 2024.01.31 ஆம் திகதி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுகின்றது. B இனால் A உற்பத்திசெய்த இயந்திரம் 2024.03.01 ஆம் திகதி ரூ.100,000/= விலைக்கு ரசீதைப் பெற்றுக்கொண்டு எடுத்துச் செல்லப்பட்டது.
மேற்படி உதாரணத்திற்கமைய பின்வரும் விடயங்களை தெளிவுபடுத்துக.

1. பொருள் விற்பனை ஒப்பந்தம்
2. பொருள் விற்பனைக்கான ஒப்பந்தம் (05 புள்ளிகள்)

03. I. காப்புறுதி ஒப்பந்தமொன்றுக்கு அடிப்படையாக அமையும் பிரதான கோட்பாடுகள் ஐந்தைக் (05) குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

II. A என்பவர் தனது வீட்டுக்கு ரூ.500,000/= பெறுமதியான தீ அபாயக் காப்புறுதியொன்றை B எனும் கம்பனியிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளார். A என்பவரது வீடு திடீரென தீப்பிடித்ததோடு, நகர சபை தீயணைப்பு படையினால் தீ துரிதமாக அணைக்கப்பட்டது. தீ விபத்து காரணமாக வீட்டுக்கு ஏற்பட்ட சேதம் ரூ.100,000/= ஆகும். காப்புறுதிக் கம்பனி அந்த நட்டத்தை வழங்குவதற்கு இணங்கியது. A என்பவர் அதற்கு இணங்கவில்லை. காப்புறுதியின் பெறுமதி ரூ.500,000/= என்பதனால் மொத்தத் தொகையையும் வழங்க வேண்டுமென்பது அவரது நிலைப்பாடாகும்.

(a) காப்புறுதியின் ஏற்புடைய கோட்பாடுகளுக்கு அமைய மேற்படி நிலைமையை விளக்குக. (05 புள்ளிகள்)

(b) A என்பவர் தனது வீட்டை, B மற்றும் C ஆகிய இரண்டு கம்பனிகளிலும் ரூ.500,000/= தொகைக்கு காப்புறுதி செய்திருப்பின் A என்பவருக்கு B மற்றும் C ஆகிய இரண்டு கம்பனிகளிலிருந்தும் ரூ.100,000/= வீதம் ஏற்பட்ட சேதத்திற்காக நட்டஈட்டைப் பெற்றுக்கொள்ள முடியுமா என்பதை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

## பகுதி II

04. I. ஆப்ரஹாம் மாஸ்லோவின் தேவை படியமைப்புக் கோட்பாடு (Maslow's hierarchy of needs) பிரகாரம் மனிதர்களின் தேவைகள் ஐந்து (05) வகை என ஆரம்பமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்தத் தேவைகள் ஐந்தையும் (05) குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

II. மேற்படி (I) இல் குறிப்பிடப்படும் தேவையொன்றை விபரித்து தாங்கள் பணியாற்றும் நிறுவனத்தின் ஊழியர்களை ஊக்கப்படுத்தும் (Motivation) பொருட்டு அந்தத் தேவைப் படிமுறையை பூரணப்படுத்தி ஊழியர் ஊக்கப்படுத்தலை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமான விதத்தை விளக்குக. (15 புள்ளிகள்)

05. "நிறுவன மற்றும் தனியாள் முகாமையின் போது மாற்ற முகாமைத்துவம் (Change Management) பிரதானமானது. மாற்ற முகாமையின் போது தனிநபர்சார் தடைகள் மற்றும் நிறுவன ரீதியான தடைகள் (Resistance) என்பவற்றை அடையாளம் காண்பது மிகவும் முக்கியமாகும்." கலந்துரையாடுக. (20 புள்ளிகள்)

06. I. தொடர்பாடல் செயன்முறையை (Communication Process) வரைப்படமொன்றின் மூலம் விளக்குக. (10 புள்ளிகள்)

II. மேற்படி செயன்முறையின் இரண்டு (02) படிமுறைகள் தொடர்பில் சிறு குறிப்பு எழுதுக. (10 புள்ளிகள்)

***********